ஸ்ரீ:

ஸ்ரீமதே நிக$_3$மாந்தமஹாதே$_3$ஶிகாய நம:

ஸ்ரீமாந் வேங்கடநாதா$_2$ர்ய: கவிதார்க்கிககேஸரீ ।
வேதா$_3$ந்தாசார்யவர்யோ மே ஸந்நித$_4$த்தாம் ஸதா$_3$ ஹ்ரு'தி$_3$ ॥

நம்மாழ்வார் அருளிச்செய்த

# ॥ பிறவித்துயர் ॥

*This document* has been prepared by*

***Sunder Kidambi***

*with the blessings of*

ஸ்ரீ ரங்க$_3$ராமாநுஜ மஹாதே$_3$ஶிகன்

**His Holiness *śrīmad āṇḍavan* of *śrīraṅgam***

*This was typeset using skt, LaTeX, Itrans, and the iitmtam font.

ஸ்ரீ:
ஸ்ரீமதே ராமாநுஜாய நம:

# ॥ பிறவித்துயர் ॥

## ஆராதிப்பார்க்கு மிக இனியன்

‡பிறவித்துயர் அற⋆ ஞானத்துள் நின்று⋆
துறவிச் சுடர் விளக்கம்⋆ தலைப்பெய்வார்⋆
அறவனை⋆ ஆழிப்படை அந்தணனை⋆
மறவியை இன்றி⋆ மனத்து வைப்பாரே (1)

வைப்பாம் மருந்தாம்⋆ அடியரை⋆ வல்வினைத்
துப்பாம் புலன் ஐந்தும்⋆ துஞ்சக்கொடான் அவன்⋆
எப்பால் யவர்க்கும்⋆ நலத்தால் உயர்ந்துயர்ந்து⋆
அப்பால் அவன்⋆ எங்கள் ஆயர் கொழுந்தே (2)

ஆயர் கொழுந்தாய்⋆ அவரால் புடையுண்ணும்⋆
மாயப் பிரானை⋆ என் மாணிக்கச் சோதியை⋆
தூய அமுதைப்⋆ பருகிப் பருகி⋆ என்
மாயப் பிறவி⋆ மயர்வறுத்தேனே (3)

மயர்வற என் மனத்தே⋆ மன்னினான் தன்னை⋆
உயர்வினையே தரும்⋆ ஒண் சுடர்க் கற்றையை⋆
அயர்வில் அமரர்கள்⋆ ஆதிக் கொழுந்தை⋆ என்
இசைவினை⋆ என் சொல்லி யான் விடுவேனோ (4)

விடுவேனோ⋆ என் விளக்கை என்னாவியை⋆
நடுவே வந்து⋆ உய்யக் கொள்கின்ற நாதனை⋆
தொடுவே செய்து⋆ இள வாய்ச்சியர் கண்ணினுள்⋆
விடவே செய்து⋆ விழிக்கும் பிரானையே (5)

பிரான்⋆ பெரு நிலம் கீண்டவன்⋆ பின்னும்
விராய் மலர்த் துழாய்⋆ வேய்ந்த முடியன்⋆
மராமரம்⋆ எய்த மாயவன்⋆ என்னுள்
இரான் எனில்⋆ பின்னை யான் ஒட்டுவேனோ (6)

www.prapatti.com

யான் ஒட்டி என்னுள்⋆ இருத்துவம் என்றிலன்⋆
தான் ஒட்டி வந்து⋆ என் தனி நெஞ்சை வஞ்சித்து⋆
ஊன் ஒட்டி நின்று⋆ என் உயிரில் கலந்து⋆ இயல்
வான் ஒட்டுமோ⋆ இனி என்னை நெகிழ்க்கவே (7)

என்னை நெகிழ்க்கிலும்⋆ என்னுடை நல் நெஞ்சந்
தன்னை⋆ அகல்விக்கத்⋆ தானும் கில்லான் இனி⋆
பின்னை நெடும் பணைத் தோள்⋆ மகிழ் பீடுடை⋆
முன்னை அமரர்⋆ முழுமுதலானே (8)

அமரர் முழுமுதல்⋆ ஆகிய ஆதியை⋆
அமரர்க்கமுதீந்த⋆ ஆயர் கொழுந்தை⋆
அமரவழும்பத்⋆ துழாவி என்னாவி⋆
அமரத் தழுவிற்று⋆ இனி அகலுமோ (9)

அகலில் அகலும்⋆ அணுகில் அணுகும்⋆
புகலும் அரியன்⋆ பொருவல்லன் எம்மான்⋆
நிகரில் அவன் புகழ்⋆ பாடி இளைப்பிலம்⋆
பகலும் இரவும்⋆ படிந்து குடைந்தே (10)

‡குடைந்து வண்டுண்ணும்⋆ துழாய் முடியானை⋆
அடைந்த தென் குருகூர்ச்⋆ சடகோபன்⋆
மிடைந்த சொல் தொடை⋆ ஆயிரத்திப்பத்து⋆
உடைந்து நோய்களை⋆ ஓடுவிக்குமே (11)

‖ நம்மாழ்வார் திருவடிகளே சரணம் ‖

www.prapatti.com